பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
05 01 2026 MONDAY 6 30 PM
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டு மக்களின் ஒற்றுமையே, நமது கலாச்சாரத்தை பாதுகாத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக இதுவரை இல்லாத அளவிற்கு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

- மஞ்சள் வாரியத்தின் மண்டல அலுவலகத்தை ஈரோட்டில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் அறிவித்துள்ளார்.

- மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- பிரிட்டிஷ் ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் மற்றும் Aryaveer Dewan அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

நாட்டு மக்களின் ஒற்றுமையே, நமது கலாச்சாரத்தை பாதுகாத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், நமது கலாச்சாரத்திற்கு எதிராக எண்ணற்ற தாக்குதல்கள் நடைபெற்றதை சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், நாட்டு மக்களின் ஒற்றுமை காரணமாக, அவை முறியடிக்கப்பட்டு கலாச்சாரம் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் மூலம். மின்னணு பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வெகுவாக அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த 11 ஆண்டுகளில் மின்னணு பொருட்களின் உற்பத்தி 6 மடங்கு அதிகரித்துள்ளதாக கூறினார்

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அதன் ஏற்றுமதி 8 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்னணுப் பொருட்கள் உற்பத்தி துறை 25 லட்சம் வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>><<<<<

மஞ்சள் வாரியத்தின் மண்டல அலுவலகத்தை ஈரோட்டில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் அறிவித்துள்ளார்.

இன்று ஈரோட்டில் விவசாயிகளுடன் கலந்துரையாடுகையில் அவர், இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் சோதனை ஆய்வகத்தை ஈரோட்டில் அமைக்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மஞ்சள் அறுவடைக்கான நவீன இயந்திரங்களை வடிவமைக்குமாறு விஞ்ஞானிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

மகளிரின் மிகப் பெரிய எதிரியாக திமுக செயல்படுகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

டாஸ்மாக் கடைகள் மூலம் 50 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் திமுக அரசு, வேளாண் நிலங்களுக்கு பாசன வசதியை ஏற்படுத்தி தரவில்லை என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<

தேசிய ஜனநாயக கூட்டணி, தமிழர்களுக்கு எதிரானது என்ற தவறான தகவலை திமுக பரப்பி வருவதாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக-வின் இந்த குற்றச்சாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நேற்று புதுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் முறியடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் வளர்ச்சிக்காக இதுவரை இல்லாத அளவிற்கு மத்திய அரசு திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாக கூறிய அவர் இவற்றை திரு. அமித் ஷா தமது உரையில் பட்டியலிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையில், தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம், காசி தமிழ்ச் சங்கமம், குடிமைப்பணி தேர்வுகளை தமிழில் எழுதுவதற்கு அனுமதி, பனாரஸ் ஹிந்து

பல்கலைக் கழகத்தில் பாரதி பெயரில் தமிழ் இருக்கை, 13 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு போன்ற மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை திரு. அமித் ஷா தமது உரையில் எடுத்துரைத்ததாக அவர் கூறியுள்ளார்.

தமிழ் கலாச்சாரத்தின் அடையாளமான செங்கோல் நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்டதையும் திரு. தர்மேந்திர பிரதான் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

தமிழர் பண்பாட்டையும், விவசாய பெருமக்களின் உழைப்பை போற்றும் பண்டிகையாக பொங்கல் திகழ்கிறது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா திருச்சியில் நடைபெற்ற நம்ம ஊரு மோடி பொங்கல் விழாவில் பங்கேற்றதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் பிஜேபியின் நிர்வாகிகள், விவசாயிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றதாகவும் கூறியுள்ள டாக்டர் எல். முருகன், அதுதொடர்பான புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த நான்காண்டுகளில் இலவச மடிக்கணினி வழங்காமல், தற்போது வழங்குவது சட்டப்பேரவைத் தேர்தலை கருத்தில் கொண்டுதான் என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி, சமூகவலைளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வுதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று வாக்குறுதியை அளித்து விட்டு, அதனை செயல்படுத்தாமல், உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அறிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

எதிர்கட்சியாக இருக்கும் போது பொங்கல் பரிசு தொகுப்புடன் 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய திமுக, ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் தற்போது 3 ஆயிரம் ரூபாய் மட்டும் வழங்குவது ஏன் என்றும் அஇஅதிமுக வினவியுள்ளது.

>>>>><<<<<

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக செயல்படுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு குடும்பத்தை மட்டும் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கில் திமுக செயல்படுவதாக கூறியுள்ளார்.

இதற்கு சட்டப்பேரவை தேர்தலில் மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுகவிற்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காது என்ற நிலைப்பாட்டிற்கு காங்கிரஸ் வந்துவிட்டதா என்று மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் வினவியுள்ளார்.

திருத்துறைப்பூண்டியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் இதுவரை கூட்டணி அரசு அமைத்தாக வரலாறு இல்லை என்று கூறினார்.

இதுதொடர்பாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கம் தாக்கூர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது, கூட்டணி அமைச்சரவை குறித்து விவாதிப்பதற்கான அவசியம் எழவில்லை என்றும் திரு. சண்முகம் தெளிவுபடுத்தினார்.

>>>>><<<<<

சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் சட்டவிரோதமாக செயல்படும் Resort-களை அகற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால், வரும் 19ஆம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், ஈரோடு மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. எம்.எம். ஸ்ரீவஸ்தவா, நீதிபதி திரு. அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணை வரும் 19ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் வரும் வெள்ளிக்கிழமை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் 46 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் கிளை நூலகம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

மதுரை மாவட்டம், அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முகூர்த்தக்கால் நடும் விழாவில் மாநில அமைச்சர் திரு. மூர்த்தி இன்று பங்கேற்றார்.

>>>>><<<<<

பொங்கல் பண்டிகையை ஒட்டி, மேட்டூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மண்பானை மற்றும் அடுப்புகள் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

>>>>><<<<<

தூத்துக்குடியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. இளம்பகவத் இன்று வழங்கினார்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு மாத விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

பிரிட்டிஷ் ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 11-4, 10-12, 11-9, 11-3 என்ற செட்கணக்கில் எகிப்தின் Barb Sameh-ஐ வென்றார்.

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் Aryaveer Dewan-ம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

வதோதரா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rajdeep Biswas பட்டம் வென்றார்.

11 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 11-8, 11-6, 11-13, 11-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Sharvil Karambelkar-ஐ வென்றார்.

>>>>><<<<<

பெங்களூரு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Manas Dhamne* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், *7-5, 4-6, 6-1* என்ற செட்கணக்கில் குரோஷியாவின் *Matej Dodig*-யை வென்றார்.

*>>>>>END<<<<<*